[1992 ஏப்ரல் 28

6. '' இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா '' முன்னாள் கட்டுரையாளர் கே. பி. சுனில், '' முரசொலி '' ஆசிரியர் மற்றும் '' கோவை மாலை முரசு '' ஆசிரியர் ஆகியோரை பேரவை கூடாதபோது கைது செய்தால் பேரவைத் தலைவர் முன் ஆஜராகச் செய்யும்மாறும் பேரவைக் கூடும்போது அவர்களைப் பேரவைமுன் பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று ஆஜராகச் செய்யுமாறும் பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பு.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய தினம் பேரவையின் அலுவல்கள் முடிவடைகின்ற போதிலும் பேரவையின் முடிவிற்கு இணங்க திருவாளர்கள் சுனில், இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி, முன்னாள் எழுத்தாளர் திரு. எஸ். செல்வம், ஆசிரியர், முரசொலி, திரு. சுந்தர், ஆசிரியர், கோவை மாலை முரசு ஆகியோரை கைது செய்து இந்தப் பேரவைக்கு அவர்களைக் கண்டிப்பதற்காக அழைத்து வரவேண்டும் என்று என்னால் பிறப்பிக்கப்பட்ட பிடி ஆணையின் படி பேரவைக் கூட்டம் இல்லாத நாளில் அவர்கள் கைது செய்யப்பட்டால் தொடர்ந்து பேரவை கூடும் நாளில் பேரவைமுன் ஆஜர்படுத்துவதற்கான ஆணையினைப் பெறுவதற்காக என்முன் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என்று காவல் துறையினருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மீண்டும் பேரவை கூடும் எந்த நாளில் அவர்களைப் பேரவைமுன் அழைத்து வரவேண்டுமென்பதற்குரிய கட்டளையை அப்போது நான் பிறப்பிப்பேன். அதற்கேற்றவாறு காவல் துறை அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. உரிமைப் பிரச்சினைகள். (தொடர்ச்சி)

(ஆ) உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் 12—2—1992 ஆம் தேதிய '' ஜுனியர் விகடன் '' பத்திரிகையில் பேரவை நடவடிக்கைகளைத் திரித்து கருத்துக்கள் கூறியதாகக் கூறப்படுவது பற்றிய பிரச்சினை குறித்து.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இந்தப் பேரவையை அவமதிக்கின்ற வகையிலேயும், அவருக்கு இருக்கின்ற உரிமையைமறுக்கிற வகையிலேயும், பேரவைத் தலைவருடைய நடவடிக்கைகளுக்கும் உள்நோக்கம் கற்பிக்கின்ற வகையிலேயும் ஒரு பத்திரிகையில் கருத்துக்கள் கூறியதைக் குறிப்பிட்டு பேரவை உறுப்பினர், டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவை உரிமை மீறல் பிரச்சினை எழுப்பியிருந்தார். அவர் இந்தப் பிரச்சினையை எழுப்பிய